IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

**CASE NO: OS.466/2024**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | கண்ணன் | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | காசிபிள்ளை | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | கொண்டையங்குப்பம் | | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/ வயது | : | 51 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 25th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் கொண்டையங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1.27.07.1951 தேதியிட்ட முனுசாமி பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 04.08.1983 தேதியிட்ட மணிபிள்ளை பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 29.03.1994 தேதியிட்ட பெருமாள் த/பெ. பலராமன் பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 07.09.2006 தேதியிட்ட முனுசாமி பெயரில் உள்ள அடமான பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5.28.09.2010 தேதியிட்ட கண்ணன் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. 16.04.2010 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. 27.07.2010 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8.10.02.2014 தேதியில் வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண். 107/2011 வழக்கின் தள்ளுபடியான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. தாவா சொத்திற்கு 1ம் வாதி கணவரின் கிரையதாரர் துளசியம்மாள் பெயரில் உளள் பட்டா. பட்டா எண்.136 அசல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10.தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி போலியாக ஏற்படுத்திய ஆவணங்களை கொண்டு துளசியம்மாள் பெயரில் உள்ள பட்டாவில் அவர் பெயரை கூட்டாக சேர்த்து ஏற்படுத்திய பட்டா கணிணி நகல் பட்டா எண்.136 **வா.சா.ஆ.10** ஆகும்.

11. 22.05.2024 தேதியன்று 1ம் வாதி தெள்ளார் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பெயரில் வழங்கிய CSR அசல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12.4ம் வாதியின் மனைவி உண்ணாமலை என்பவரை 1ம் பிரதிவாதி தாக்கியதால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான மருத்துவ சான்று அசல். **வா.சா.ஆ.12** ஆகும்.

13. 05.04.1991 தேதியிட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.13 ஆகும்.

14.துளசியம்மாள் பணை மரங்களை எழுதிக்கொடுத்ததற்கான ரசீது அசல். வா.சா.ஆ.14 ஆகும்.

15.25.05.1993 தேதியிட்ட கஸ்தூரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.15 ஆகும்.

வா.சா.ஆ.14 ஆவணம் முழுமையாக இல்லை என்ற எதிர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.11.25 06:06:17 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்